**வரையறுத்த மகனெகும வீதி நிர்மாண இயந்திர உபகரண (தனியார்) கம்பனி – 2023 மற்றும் 2024**

------------------------------------------------------------------------------------------------------------------------

வரையறுத்த மகனெகும வீதி நிர்மாண இயந்திர உபகரண (தனியார்) கம்பனியின் 2023 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த காலப்பகுதிக்கான செயற்பாடு நடவடிக்கைகள் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2017 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 150(1) ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்கான நிதிக்கூற்றுக்கள் 2025 மார்ச்31 ஆந் திகதி வரையும் சமர்ப்பிக்கப்படவில்லை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனக் கருதுகின்ற கம்பனியின் செயறபாடுகள் சம்பந்தமான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் நிருவகிக்கின்ற தரப்பினர்களின் பொறுப்பு

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனத்தினாலும் அந்த நிறுவனம் சம்பந்தமான வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானம், செலவுகள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக முறைப்படியாக ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும். அந்த அதிகாரச் சட்டத்தின் 16(2) ஆம் பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனம் சம்பந்தமான வருடாந்த நிதிக்கூற்றுக்களை சட்ட விதிகளின் மூலம் காட்டக்கூடிய வகையான காலப்பகுதியில் அந்த நிறுவனங்களின் வருடாந்த செயலாற்றல அறிக்கைகளுடன் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அந்த அதிகாரச் சட்டத்தின் 38(1)(ஈ) பிரிவின் பிரகாரம் ஆண்டறிக்கையும் ஏனைய நிதிக்கூற்றுக்களையும் ஏனைய நிதிக்கூற்றுக்களும் தேவையான காலத்திற்குள் தயாரிக்கப்படுகின்றன என சான்றுபடுத்த வேண்டியதுடன் அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனம் தொடர்பான ஆண்டறிக்கையினை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

## 2. கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 ஸ்தாபித்தல்

| | அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் ஒரு கம்பனியாகச் செயற்பட்ட வீதி நிர்மாணங்கள் மற்றும் அபிவிருத்தி செய்தல் தனியார் கம்பனியை (RC & DC) முழுமையாக மூடுவதற்கும் ஒரு தனியார் பொதுக் கம்பனியை | கணக்காய்சுவு அவதானிப்புக்களுடன் இணங்கிக் கொள்ளப்பட்டுள்ளது. | அரசாங்க சட்டவிதிகள் மற்றும் அமைச்சரவை தீர்மானங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்து அரசாங்கத்தின் உரிமையை பாதுகாப்பதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | தோற்றுவிக்கும் இயலுமை தொடர்பாக பெருந்தெருககள் அமைச்சு மற்றும் திறைசேரியினால் பரீட்சித்துப் பார்ப்பதற்கும் 2024 சனவரி 21 ஆந் திகதி நடைபெற்ற அமைப/04/0053/104/004 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தும் அதற்கு இணக்கமற்ற வகையில் கம்பனி ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. | | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | நிர்மாணக் கைத்தொழில் சங்கம் மற்றும் ஒப்பந்தக்காரர்களின் சங்கத்துடன் கூட்டு முயற்சியினை உருவாக்கி கம்பனியை தோற்றுவிப்பதற்காக 2004 ஆகஸ்ட் 27 ஆந் திகதிய 04/0848/004/013-I ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் அந்த அமைச்சரவை அங்கீகாரத்திற்கு முன்னர் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் 795/2004 ஆம் இலக்க பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் 2004 யூன் 11 ஆந் திகதி கம்பனி ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்சுவு அவதானிப்புக்களுடன் இணங்கிக் கொள்ளப்பட்டுள்ளது. | அரசாங்க சட்டவிதிகள் மற்றும் அமைச்சரவை தீர்மானங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்து அரசாங்கத்தின் உரிமையை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | கம்பனியின் பெரும்பாண்மை உரிமையை திறைசேரிக்கு ஒப்படைக்கும் வகையில் மிகுதிப் பங்குகள் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு கிடைக்கும் வகையில் கம்பனியின் அமைப்பு புறவிதியினை திருத்தம் செய்வதற்கு 2013 பெப்ரவரி 18 ஆந் திகதிய 13/0134/505/004 ஆம் இலக்க அமைச்சரவை | கணக்காய்சுவு அவதானிப்புக்களுடன் இணங்கிக் கொள்ளப்பட்டடுள்ளது. | அரசாங்க சட்டவிதிகள் மற்றும் அமைச்சரவை தீர்மானங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்து அரசாங்கத்தின் உரிமையை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

தீர்மானம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தும் அந்த அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க கம்பனியின் அமைப்பு புறவிதி திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை.

## 2.2 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

| அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| கம்பனியின் 2022 திசெம்பர் 31 ஆந் தகிதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நிர்ணயிக்கப்பட்ட திகதியிலிருந்து 01 ஆண்டு 07 மாதங்கள் தாமதித்து 2024 ஒக்தோபர் 08 ஆந் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்கான கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் இன்றுவரை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்சூவு அவதானிப்புக்களுடன் இணங்கிக் கொள்ளப்பட்டடுள்ளது. | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை PED/01/2021 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகளுக்கான வழிகாட்டிக் கோவையின் 6.6 ஆம் பிரிவின் பிரகாரம் அனைத்து அரசாங்க கம்பனிகளின் நிதிக்கூற்றுக்கள் நிதி ஆண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

## 2.3 சொத்துக்கள், பொறுப்புக்கள் வருமானங்கள் மற்றும் செலவுகள்

கம்பனியின் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் சொத்துக்கள், பொறுப்புக்கள் வருமானங்கள் மற்றும் செலவுகள் பின்வருமாறாகும்.

| விபரம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி (ரூபா) |
|---|---|
| முழு சொத்துக்கள் | 34,943,756,587 |
| முழு உரிமையாண்மை | 3,042,851,785 |
| முழு பொறுப்புக்கள் | 31,900,904,802 |

| | |
|---|---|
| வருமானம் | 18,370,592,517 |
| விற்பனைக் கிரயம் | 17,451,262,405 |
| மொதத இலாபம் | 919,330,112 |
| ஏனைய வருமானங்கள் | 401,884,682 |
| செலவுகள் | 561,569,481 |
| வரி | 95,853,101 |
| இலாபம்/ (நட்டம்) | 663,792,213 |

**2.4 கடந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அபிப்பிராயம்**

கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது இடம்பெற்றிருந்த கணக்காய்வு குறைபாடுகள், இணக்கமின்மைகள், பிழைகள், விட்டுவிடுதல்கள், சான்றுகள் சமர்ப்பிக்காமை என்பவற்றினால் கணக்காய்வாளரின் நோக்கெல்லை மட்டுப்படுத்தப்படுவதன் காரணமாக 2018, 2019 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக மறுப்பு கணக்காய்வு அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான உள்ளகக்கட்டுப்பாட்டு பலவீனமாக இருத்தல், இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள், கணக்கீட்டு குறைபாடுகள் என்பன சம்பந்தமாக முாமைத்துவம் கருத்துவேறுபாடு கொண்டிருந்ததன் காரணமாக 2020 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக மறுப்பு அபிப்பிராயம் வழங்கப்பட்டிருந்தது.

**2.5 கம்பனி தொடர்ச்சியாக நிலைத்திருத்தல் மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகள்**

| | அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | வரையறுத்த மகநெகும வீதி நிர்மாண இயந்திர உபகரணங்கள் (தனியார்) (கம்பனி) வரையறுத்த மகநெகும இமல்சன் உற்பத்திகள் (தனியார்) கம்பனி மற்றும் வரையறுத்த மகநெகும ஆலோசனை மற்றும் செயற்திட்ட முகாமைத்துவ (தனியார்) கம்பனி என்பவற்றை ஒன்றிணைத்து தனி ஒரு கம்பனியை தோற்றுவிப்பதற்கு 2023 மார்ச் 28 ஆந் திகதிய 23/0394/608/033 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானம் எடுக்கப்பட்டிருந்ததனால் ஒரு தனியார் கம்பனியால் தமக்கு கிடைக்க வேண்டிய அனைத்து பணங்களையும் செலுத்தி கலைக்குமாறு வேண்டி 2023 மே 02 ஆந் திகதி ஒரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இதற்கு மேலதிமாக மீண்டும் | கணக்காய்சாவு அவதானிப்புக்களுடன் இணங்கிக் கொள்ளப்பட்டுள்ளது. | அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு இணங்க சட்டரீதியான ஏற்பாடுகளின் பிரகாரம் கம்பனியை கலைக்கும் நடவடிக்கையை முடிவுறுத்துதல் வேண்டும். |

நீதிமன்ற நடைமுறைகளுக்குப் புறம்பாக அவர்களின் தற்றுணிபின் பேரில் கம்பனி கணக்குகளைத் தீர்த்து மூடுகின்ற முறைமையை பின்பற்றுகிறது எனவும் தெரிவு செய்யப்பட்ட சேவை வழங்குனர்கள் மற்றும் கடன்கொடுத்தோர்களுக்கு பணம் செலுத்தப்படுகின்றது எனவும் நிலையான ஆதனங்களை விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது எனவும் ஒரு தனியார் கம்பனியால் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. அதற்கிணங்க தற்காலிக கலைப்பாளரினை நியமிப்பதற்கும் நீதிமன்ற நடைமுறைகளுக்குப் புறம்பாக கலைப்பதற்கான கம்பனியின் நடவடிக்கையை தவிர்க்குமாறு கம்பனிக்கு ஒரு இடைக்கால தடை உத்தரவு நீதி மன்றத்தினால் வழங்கப்பட்டுள்ளது. 2023 ஆகஸ்ட் 10 ஆந் திகதியிலிருந்து 2023 செப்தெம்பர் 01 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் நீதிமனற்த்தினால் ஒரு தனியார் நிறுவனம் தற்காலிக கலைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளதுடன் அவரின் செயற்பாடுகளானது வங்கி கணக்குகளையும் திறைசேரி உண்டியல்களையும் நிருவகிப்பதற்காக மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அவ்வப்போது தற்காலிக கலைப்பாளரினை நியமித்தல் மற்றும் நீக்குதல் இடம்பெற்றிருந்த போதிலும் கணக்காய்வு திகதி வரையும் கம்பனியின் கலைத்தல் நடவடிக்கை முடிவடைந்திருக்கவில்லை. அவ்வாறே தனியொரு கம்பனியை தோற்றுவிக்கும் நடவடிக்கையும் இடம்பெற்றிருக்கவில்லை.

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | தற்காலிக கலைப்பாளரினை நியமிக்கும் கட்டளை நீக்கப்பட்டதன் பின்னர் மீண்டும் 2024 ஆகஸ்ட் 02 ஆந் திகதி சேவை வழங்குனர்கள் மற்றும் கடன்கொடுத்தோர்களுக்கு கொடுப்பனவுகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அத்திகதியில் சேவை வழங்குனர்கள் மற்றும் கடன்கொடுத்தோர்களுக்குச் செலுத்த வேண்டிய மீதி ரூபா 8,570,116,489 ஆக இருந்ததுடன் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதியில் உள்ளவாறு அவற்றில் ரூபா 4,124,527,967 செலுத்தப்பட்டிருந்ததுடன் இன்னும் செலுத்த வேண்டியுள்ள மீதி ரூபா 4,445,588,522 ஆகும். எனினும் 2025 மே 08 ஆந் திகதியில் உள்ளவாறு கம்பனியின் கணனி தரவு முறைமையின் தரவுகளின் பிரகாரம் 2024 ஆகஸ்ட் 02 ஆந் திகதியில் உள்ளவாறு சேவை வழங்குனர்கள் மற்றும் கடன்கொடுத்தோர்களுக்குச் செலுத்த வேண்டிய மீதி ரூபா 8,659,481,440 தொகையும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதியில் உள்ளவாறு இன்னும் செலுத்த வேண்டியுள்ள மீதி ரூபா 4,562,128,576 தொகையும் ஆக இருந்ததுடன் உரிய உறுதிப்படுத்தல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2025 மே 08 ஆந் திகதியில் உள்ளவாறான கணனி தரவு முறைமையிலுள்ள தரவுகளின் பிரகாரம் 2024 ஆகஸ்ட் 02 ஆந் திகதியில் உள்ளவாறு சேவை வழங்குனர்கள் மற்றும் கடன் கொடுத்தோர்களுக்குச் செலுத்த வேண்டிய மீதி ரூபா 8,659,481,440 ஆகும். அவ்வாறே 2025 பெப்ரவரி 21 ஆந் திகதியில் உள்ளவாறான கணனி முறைமையிலுள்ள தரவுகளின் பிரகாரம் சேவை வழங்குனர்கள் மற்றும் கடன் கொடுத்தோர்களுக்குச் செலுத்த வேண்டியுள்ள மீதி ரூபா 4,562,128,576 ஆகும். | உரிய உறுதிப்படுத்தல்களுடன் செலுத்த வேண்டிய மீதியை சரியாக அடையாளங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | சுயவிருப்பில் ஓய்வுபெறும் திட்டத்தினை அறிமுகப்படுத்தியதன் மூலம் ஆளணியினரைக் குறைத்ததன் பின்னர் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மூன்று மகநெகும கம்பனிகளை ஒருங்கிணைத்து தனியொரு கம்பனியைத் தோற்றுவிப்பதற்கு 2023 மார்ச் 28 ஆந் திகதிய அமைப/23/0394/608/033 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் | ஓய்வுபெற்ற ஊழியர்களுக்குச் செலுத்தப்பட்ட பெறுமதி சரியானது. | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் கலைத்தல் நடவடிக்கை முடிவடையும் வரை தேவையான ஊழியர்களை நிறுத்தி வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் கலைத்தல் நடவடிக்கை முடிவடையும் வரை தேவையான ஆளணியினரை நிறுத்திவைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். எவ்வாறாயினும் 2023 மார்ச் 24 ஆந் திகதி பணிப்பாளர் சபையினால் கம்பனியின் ஊழியர்கள் ஓய்வுபெறச் செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.<br>செயற்பாடுகளை நிறுத்துவதற்கு முன்னர் கம்பனியில் 804 ஊழியர்கள் சேவையில் ஈடுபட்டிருந்ததுடன் சுயவிருப்பில் ஓய்வுபெறும் முறைமையின் கீழ் 2024 ஆம் ஆண்டு இறுதி வரை 670 ஊழியர்கள் ரூபா 740,187,761 தொகை இழப்பீட்டினைப் பெற்று ஓய்வுபெற்றிருந்தனர். இதற்கு மேலதிகமாக சேவையை முடிவுறுத்தும் அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் 121 ஊழியர்கள ரூபா 85,407,916 தொகை இழப்பீட்டினைச் செலுத்தி கட்டாய ஓய்வில் அனுப்பப்பட்டிருந்தனர். இந்த கட்டாய மற்றும் சுயவிருப்பு ஓய்வு பெறும் திட்டத்தினை அமுல்ப்படுத்தும் போது கம்பனியை கலைக்கும் வரையான நடவடிக்கையை செயற்படுத்துவதற்குத் தேவையான ஊழியர்களை அடையாளங்கண்டு அந்த நபர்கள் நிறுத்திவைக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | கம்பனியின் செயற்பாட்டு நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்தும் 2023 மே 30 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் சுயவிருப்பபு மற்றும் கட்டாய ஓய்வில் சென்ற 91 நபர்கள் கடமை ஒப்படைப்பு உடன்படிக்கையின் | பிரதிப் பொது முகாமையாளர் (நிதி) என்ற பதவிக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்ட உத்தியோகத்தர் ஒரு மாத காலம் சேவையில் ஈடுபட்டிருந்தார். பின்னர் அந்த பதவிக்கு எந்த ஆட்சேர்ப்பும் | சிக்கனமற்ற செலவுகளைக் குறைப்பதற்கும் அமைச்சரவைத் தீர்மாத்தினை தாமதமின்றி அமுல்ப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அடிப்படையிலும் இன்னும் மூன்று புதிய நபர்கள் கடமை ஒப்படைப்பு அடிப்படையிலும் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தனர். இந்த உத்தியோகத்தர்களுக்கு 2023 யூன் 01 ஆந் திகதியிலிருந்து 2025 பெப்ரவரி 28 ஆந் திகதி வரை சம்பளமும் படிகளுமாக ரூபா 172,280,973 செலுத்தப்பட்டிருந்தும் கம்பனியை கலைக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே இன்று வரை இந்த ஊழியர்களை தெரிவு செய்யும் அடிப்படை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் செயற்பாட்டு நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருக்கும் பின்னணியில் 2023 யூன் 06 ஆந் திகதியிலிருந்து ரூபா 245,000 மாதாந்த சம்பளத்தின் அடிப்படையில் பிரதி பொது முகாமையாளர் (நிதி) பதவிக்காவும் மாதாந்தம் ரூபா 172,000 சம்பளத்தின் அடிப்படையில் இரண்டு நிதி முகாமையாளர்களையும் சேர்த்துக்கொள்வதற்கு போதியளவான தேவைப்பாடு கணக்காய்வில் அவதானிக்கப்படவில்லை. | மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. எனினும் வேலைத் தேவைப்பாட்டின் அடிப்படையில் இரண்டு நிதி முகாமையாளர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தனர். | |
| (உ) | 2023 மார்ச் 28 ஆந் திகதிய அமைப/23/0394/608/033 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் இக்கம்பனியின் செயற்பாட்டு நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட்டு ஊழியர்கள் ஓய்வுபெற்றிருந்தும் கம்பனியின் பின்வரும் விளைவற்ற, குறைவாகப் பயன்படுத்தப்பட்ட மற்றும் செயற்பாடற்ற சொத்துக்கள் காணப்பட்டது என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.<br>• கம்பனியின் முறையே ரூபா 588,762,952 மற்றும் ரூபா 116,148,540 கிரயமான 66 | இயந்திரங்கள்/ வாகனங்களின் எண்ணிக்கை தொடர்பாக இணங்கிக்கொள்ளப்படுகின்றது. எனினும் அந்த அளவிலான விளைவற்ற சொத:தக்கள் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள் மற்றும் செயற்படுத்தப்படாத சொத்துக்களின் கிரயத்தை பெற்றுக்கொண்ட மூலங்கள் தொடர்பாக தெளிவான அறிவு இல்லை. | பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளக்கூடிய சொத்துக்களை வினைத்திறனாகப் பயன்படுத்துவதற்கும் செயற்படுத்தப்படாத சொத்துக்களை கைதவிர்ப்புச் செய்வதற்கும் தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

இயந்திர உபகரணங்கள், 32 வாகனங்கள் மற்றும் பெறுமதி தெரியாத 90 இயந்திர உபகரணங்களும் 60 வாகனங்களும் பேலியகொட, கனேவல்பொல, அம்பலன்கொட, கடுகம்பொல, குண்டசாலை, குருனாகல் ஆகிய வேலைத்தள வளவில் பயன்படுத்தப்பட்ட பெறுமதி தெரியாத தளபாடங்கள் மற்றும் உபகரணங்களில் அதிக அளவானவை கம்பனியின் உணவகத்திலும் நலன்புரிச் சங்க அலுவலகத்திலும் விளைவற்ற சொத்துக்களாக இருந்தன.

- கம்பனியின் ரூபா 38,595,000 கிரயமான 05 வாகனங்களும் பெறுமதி தெரியாத 05 வாகனங்களும் மற்றும் 03 இயந்திர உபகரணங்களும் குறைவாக பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்களாகக் காணப்பட்டன.
- கம்பனியின் முறையே ரூபா 16,750,000 மற்றும் ரூபா 18,858,000 கிரயமான 14 இயந்திரங்களும் 04 வாகனங்களும் மற்றும் பெறுமதி தெரியாத 12 இயந்திரங்களும் 09 வாகனங்களும் செயற்படுத்தப்படாத சொத்துக்களாகக் காணப்பட்டன.
- வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த பெறுமதி தெரியாத 44 இயந்திர உபகரணங்கள் மற்றும் பெறுமதி தெரியாத 50 வாகனங்கள் விளைவற்ற சொத்துக்களாக கம்பனியின் வளவிலும் வேலைத் தளங்களிலும்

நிறுத்திவைக்கப்பட்டிருந்தன.

## 2.6 சட்டங்கள், வதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள், பணிப்புரைகளுக்கான தொடர்பு | | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத் தின் 78 ஆம் பிரிவு | ஒவ்வொரு கம்பனியும் அதன் பங்குகளை ஒதுக்கீடு செய்த திகதியிலிருந்து 02 மாதங்களுக்குள் மற்றும் அவ்வாறான பங்குகள் கம்பனிக்கு ஒப்படைக்கப்பட்ட திகதியிலிருந்து இரண்டு மாதங்களுக்குள் அனைத்து பங்குகளின் சான்றிதழ்களை பூரணப்படுத்தி ஒப்படைப்பதற்கு ஆயத்தமாக இருக்க வேண்டிய போதிலும் கம்பனியின் முழுமையான உரிமை வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குரியதாக உள்ள போதிலும் அது தொடர்பான பங்குச் சான்றிதழ் இன்று வரை வழங்கப்படவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | கம்பனியின் முழுமையான உரிமை வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மூலம் அரசாங்கத்திற்கு கிடைக்கும் வகையில் உரிமையை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட நிறுவன நல்லாட்சி தொடர்பான வழிகாட்டிக் கோவையின் 4.2 ஆம் பிரிவு | நிதி ஆண்டில் ஆகக் குறைந்தது 03 மாதங்களுக்கு ஒரு தடவை கணக்காய்வுக் குழு கூட்டப்பட வேண்டிய போதிலும் கம்பனி தொடங்கியதிலிருந்து இன்றுவரை கணக்காய்வுக் குழுக் கூட்டம் நடைபெறவில்லை. அதற்கிணங்க நல்லாட்சி கருதுகோளினை கவனத்திற்கு எடுத்துக்கொள்ளாது கம்பனியின் | தற்பொழுது கணக்காய்வு குழு நியமிக்கப்பட்டுள்ளது. | தொடர்புபட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காய்வு குழுவினை நியமித்து ஆகக் குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை கூடி தேவையான சிபாரிசுகள் வழங்கப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | நடவடிக்கைகளைச் செயற்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | |

**2.7 வழக்கு நடவடிக்கைகள்**

| அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| வரையறுத்த மகனெகும வீதி நிர்மாண இயந்திர உபகரண கம்பனிக்கு எதிராக கம்பனியில் சேவையாற்றிய ஊழியர்கள் மற்றும் உத்தியோகத்தர்களால் தாக்கல் செய்யப்பட்ட 06 வழக்குகளும் ஏனைய தரப்பினர்களால் தாக்கல் செய்யப்பட்ட 06 வழக்குகளும் 2025 பெப்ரவரி 01 ஆந் திகதி வரை முடிவடைந்திருக்காததுடன் கம்பனியால் இந்த வழக்குகளுக்காக ரூபா 95,765,807 சட்டச் செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்கிக் கொள்ளப்பட்டது. | கம்பனிக்கு எதிராக காணப்படுகின்ற வழக்கு நடவடிக்கைகளை துரிதமாக முடிவுறுத்திக்கொள்வதற்கு கம்பனியின் ஒத்துழைப்பை உச்ச அளவில் வழங்கி அரசாங்கத்தின் உரிமையை பாதுகாக்கும் வகையில் வழக்கு நடவடிக்கைகளை துரிதமாக முடிவுறுத்துதல் வேண்டும். |

**2.8 நிதி முகாமைத்துவம்**

| அவதானிப்புக்கள் | | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மகநெகும வீதி நிர்மாண இயந்திர உபகரண கம்பனியால் ஒரு தனியார் நிறுவனத்திற்கு வீதி நிர்மாண செயற்திட்டங்கள் தொடர்பான கொடுப்பனவிற்காக வழங்கப்பட்ட ரூபா 464,348.79 பெறுமதியுள்ள காசோலைகளுக்காக மக்கள் வங்கியின் கட்டுபெத்த கிளையில் கம்பனியின் பெயரில் பேணப்பட்டு வந்த நடைமுறைக் கணக்கிற்கு ரூபா 21,846,432.10 வங்கியினால் வரவு வைக்கப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் உள்ளக | 2024-12-18 ஆந் திகதி நிதிப் பிரிவின் நடவடிக்கைகளை சில பாதுகாப்பு நடைமுறைகளுக்கு உட்பட்டு அமுல்ப்படுத்துவதற்காக தலைவர் மற்றும் பொது முகாமையாளரின் சம்பளத்தை நிறுத்தி நிதிப் பிரிவின் நடவடிக்கைகளை மிகவும் பாதுகாப்பாக மேற்கொள்வதற்காக இணைய வழியிலான கொடுப்பனவு முறைமையை பின்பற்றுதல் | நிதி மோசடிகள் சம்பந்தமாக பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக துரிதமாக ஒழுக்காற்று நடவடிக்கைகளையும் சட்ட நடவடிக்கைகளையும் எடுத்தல் வேண்டும். அதற்கிணங்க அந்த நட்டத்தை உரிய தரப்பினர்களிடமிருந்து அறவீடு |

| | | | |
|---|---|---|---|
| | கணக்காய்வு தொடக்க புலனாய்வினை மேற்கொண்டிருந்தது. அப்புலனாய்வின் அறிக்கைக்கு இணங்க காசோலையின் பெறுமதி நுட்பமான முறையில் மாற்றம் செய்யப்பட்டு (அரசாங்க இரசாயப் பகுப்பாய்வு அறிக்கைக்கு உட்பட்டு) நிதி ஒழுங்கீனம் இடம்பெற்றுள்ளது. எனவும் கம்பனியின் தலைவர் பொது முகாமையாளர், நிதி உத்தியோகத்தர், மற்றும் நிதிப் பிரிவில் சேவையாற்றுகின்ற உத்தியோகத்தர்கள் இந்த நிதி ஒழுங்கீனத்தை மேற்கொள்வதற்கு தொடர்புபட்டுள்ளமை தொடர்பான ஐயப்பாட்டினை நிராகரிக்க முடியாது எனவும் குறிப்பிடப்பட்டிருந்தும் மேற்கூறிய நிதி மோசடிகள் சம்பந்தமாக பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மற்றும் இது சம்பந்தமாக விசேட குற்ற புலனாய்வுப் பிரிவின் புலனாய்வினை மேற்கொள்ளுமாறு முறைப்பாடு செய்ததன் பின்னர் விசாரணைகள் இடம்பெற்றன. இது குற்றவியல் குற்றம் (Criminal Offence) என்பதனால் இது சம்பந்தமாக குற்றப் புலனாய்வு தீணைக்களத்தினால் நடைபெற்ற விசாரணைகள் முடிவடைந்ததன் பின்னர் வழங்கப்படுகின்ற அறிக்கை மற்றும் அவதானிப்புக்களின் அடிப்படையில் உரிய பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படும். | செய்வதற்கும் எதிர்காலத்தில் இவ்வாறான மோசடிகள் இடம்பெறுவதனைத் தவிர்ப்பதற்கும் உள்ளகக் கட்டுப்பாட்டினை வலுப்படுத்துதல் வேண்டும். |
| (ஆ) | ஒரு தடவைக்கு ரூபா 10,000 உச்ச அளவிற்கு உட்பட்டு உணவு எரிபொருள் பொதுச் செயற்பாடுகள் என்பவற்றின் சிறு செலவுகளை மேற்கொள்வதற்காக முறையே ரூபா 60,000 ரூபா 100,000 மற்றும் ரூபா 150,000 ஆக 03 சில்லறைக் காசு கட்டுநிதிகள் கம்பனியால் 2023 நவம்பர் மாதத்திலிருந்து பேணப்படுகின்றன. 2024 ஆம் ஆண்டின் இறுதி வரை எரிபொருள் செலவுகள் ரூபா 2,462,927 தொகையும் உணவுச் செலவுகள் ரூபா 2,547,153 தொகையும் பொதுச் செயற்பாடுகளுக்காக ரூபா 1,192,981 தொகையும் ஆக ரூபா 6,203,061 தொகை செலவு செய்யப்பட்டிருந்தது. சில்லறைக் காசு கொடுப்பனவுகளுக்கான சில்லறைக் காசு | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்கிக் கொள்ளப்பட்டுள்ளது. | சில்லறைக் காசுக் கட்டுப்பாட்டிற்காக சிறந்த உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை கம்பனியால் ஸ்தாபிக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வவுச்சர்களுக்குப் பதிலாக IOU வவுச்சர்கள் பயன்படுத்தபபட்டிருந்ததுடன் சில்லறைக் காசேட்டிற்குப் பதிலாக எக்செல் (Excel) பத்திரத்தின் உதவியுடன் பதிவு செய்தல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதற்கிணங்க கம்பனியின் சில்லறைக் காசு செலவுகளை கொடுப்பனவு செய்வதற்காக சிறந்த உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஸ்தாபிக்கப்பட்டிருககவில்லை. | | |
| (இ) | கம்பனியின் செயற்பாடற்ற 06 நடைமுறைக் கணக்குகளில் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரை இரண்டு ஆண்டுகளுக்கும் நான்கு ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட கால வீச்சில் ரூபா 6,313,510 மீதி காணப்பட்டிருந்தும் இச்செயற்பாடற்ற வங்கி கணக்குகளை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்புக்ககளுடன் இணங்கி கொள்ளப்படுகின்றது. எதிர்காலத்தில் இக்கணக்குகளை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நடைமுறைக் கணக்குகளிலுள்ள பணத்தை ஆக்கபூர்வமாக முதலீடு செய்து உச்ச அளவு பொருளாதார நலன்களைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.9 பெறுகை முகாமைத்துவம்

| அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.4.8 ஆம் பிரிவிற்கு இணங்க மதிப்பீடு செய்யப்பட்ட ஒப்பந்த பெறுமதியில் 5 சதவீதமான செயலாற்றல் பிணைமுறி கம்பனியால் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் ரூபா 125,730 மில்லியன் பெறுமதியான 1753 கட்டளைகளில் 1608 வேலைக் கட்டளைகளுக்காக செயலாற்றல் பிணைமுறி பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | செயலாற்றல் பிணைமுறிகளை வழங்காத சேவை வழங்குனர்களின் அங்கீகரித்த விலைப்பட்டியல்களுக்கு கொடுப்பனவு செய்யும் போது ஒப்படைக்கப்பட்ட வேலைகள் முடிவடையும் வரை செலயாற்றல் பிணை முறிகளுக்குரிய பணத்தை நிறுத்திவைத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | பெறுகை வழிகாட்டிக் கோவைகளின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றாது நடவடிக்கை எடுத்ததுடன் தொடர்புபட்ட நபர்களை அடையாளங்கண்டு முறையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2.10 ஒப்பந்த நிருவாகத்திலுள்ள குறைபாடுகள்**

| | **அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|
| (அ) | வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் 2020, 2021 ம்றும் 2022 ஆம் ஆண்டுகளில் 100,000 கிலோ மீற்றர் விதிச் செயற்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகளுக்காக ரூபா 193,518 மில்லியன் பெறுமதியான வேலைகளுக்காக 2,481 வேலைக்கட்டளைகள் கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தன. அவற்றில் ரூபா 32,736 மில்லியன் பெறுமதியான 351 வேலைக் கட்டளைகள் இரத்துச் செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 29,130 மில்லியன் பெறுமதியான 306 வேலைக் கட்டளைகளின் நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. ரூபா 5,920 மில்லியன் பெறுமதியான 71 வேலைக் கட்டளைகளின் ஒப்பந்த வேலைகளை நேரடியாக மேற்கொள்வதற்காக கம்பனியால் பொறுப்பேற்கப்பட்டிருந்ததுடன் அவை மொத்த வேலைக் கட்டளைகளில் 03 சதவீதம் மாத்திரமாகும். 2008 ஆகஸ்ட் 01 ஆந் திகதி வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் சபையினால் எடுக்கப்பட்டிருந்த தீர்மானத்திற்கு முரணாக மொத்த கட்டளைகளின் பெறுமதியில் 97 சதவீதமான ரூபா 125,730 மில்லியன் தொகையான 1753 வேலைக் கட்டளைகள் உப ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தன. | வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் சபைத் தீர்மானம் தொடர்பாக எங்கள் நிறுவனத்திற்கு தெரியப்படுடுத்தப்பட்டிருக்க வில்லை. | வேலைக் கட்டளைகளை பொறுப்பேற்கும் போது அவற்றின் செயலாள்றலுக்குரிய சட்ட விதிகள் தொடர்பாக முழுமையாக தெரிந்து கொள்வதற்கும் இணங்கி கொள்வதற்கும் கம்பனியால் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 1000,000 கிலோ மீற்றர் வீதிச் செயற்திட்டத்தில் 2022 ஆம் ஆண்டில் 3575 கிலோ மீற்றர் நீளமான 2557 வீதிகளை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் இறுதி வரை 1420 | 2022-05--02 ஆந் திகதி வரை வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் 100,000 கிலோ மீற்றர் வீதிச் செயற்திட்டத்ததின் நிர்மாணங்கள் நிறுத்தப்பட்டுள்ளதன் | பௌதீக செயலாற்றலினை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் வருமானங்கள் அவ்வப்போது |

| | | | |
|---|---|---|---|
| | கிலோ மீற்றர் நீளமான பூர்த்தி செய்யப்பட்ட வீதிகளின் எண்ணிக்கை 970 மாத்திரமாகும். அதாவது எதிர்பார்த்த நிர்மாணங்களின் தூர அளவில் 38 சதவீதம் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. உப ஒப்பந்தங்களின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட 05 சதவீத வருமானம் நிதிக் கூற்றுக்களில் வருமானத்தின் கீழும் உப ஒப்பந்தங்களின் செலவுகள் விற்பனைக் கிரயத்தின் கீழும் காட்டி உரிய கணக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டிற்கான வருமானங்களை கணக்கீடு செய்தல் இன்றுவரை முழுமையாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என நிறுவனத்தினால் தெரிவிக்கப்பட்டிருந்தது. | காரணமாக எதிர்பார்த்த தூர அளவில் 38 சதவீதமான வேலைகளை மாத்திரம் பூர்த்தி செய்ய வேண்டி ஏற்பட்டிருந்தது. | கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (இ) | கம்பனியால் 2020 ஆம் ஆண்டில் 100,000 கிலோ மீற்றர் வீதிச் செயற்திட்டத்தின் வீதி நிர்மாணங்களின் செயல் முன்னேற்றத்தினை மதிப்பீடு செய்வதற்காக மாகாண, மாவட்ட மற்றும் வலய ஒருங்கிணைப்பாளர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்த 2022 ஆம் ஆண்டில் ஒருங்கிணைாப்பாளர்களுக்கான கொடுப்பனவாக ரூபா 16 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் ஒருங்கிணைப்பாளர்களை சேர்த்துக்கொள்வது தொடர்பான தகவல்கள் மற்றும் ஒருங்கிணைப்பாளர்களால் வழங்கப்பட்ட செயல்முன்னேற்ற அறிக்கைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. எனவே தகமையுள்ள நபர்கள் முறைப்படியாகவும் வெளிப்படைத்தன்மையுடனும் சேர்த்துக்கொள்ளப்பட்டார்களா | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்கிக் கொள்ளப்பட்டுள்ளது. | கணக்காய்விற்குத் தேவையான தகவல்கள் தாமதமின்றி ஆவணங்களை தாமதமின்றி வழங்க வேண்டியதுடன் தகமையுள்ள ஒருங்கிணைப்பாளர்களை முறைப்படியாக சேர்த்துக் கொள்வதற்கும் செயல் முன்னேற்றத்தை பரீட்சித்ததன் பின்னர் மாத்திரம் கொடுப்பனவு செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் செயல்முன்னேற்ற மதிப்பீடுகளின் பின்னர் ஒருங்கிணைப்பாளர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டதா என்பது கணக்காய்வில் உறுதிப்படுத்தப்படவில்லை. | | |
| (ஈ) | வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் வீதி நிர்மாண செயற்திட்டங்களை அமுல்ப்படுத்தும் போது அதற்கான கிரய மதிப்பீடானது விலை விகிதங்களின் அடிப்படையில் தயாரித்து அதற்கு 25 சதவீத இலாப வரம்பு சேர்க்கப்பட்டு ஒப்பந்த பெறுமதியை தீர்மானத்து ஒப்பந்த கம்பனிக்கு வழங்கப்படுவதுடன் கம்பனியால் மேற்கூறிய இலாப வரம்பில் 20 சதவீதம் உப ஒப்பந்தக்கார்களுக்கு வழங்கப்பட்டு 05 சதவீத இலாப வரம்பினை கம்பனி வைத்துக்கொள்வதன் மூலம் 2023 ஆம் ஆண்டில் செயற்திட்ட செயற்பாடுகளில் ஈடுபடாது ரூபா 1,386 மில்லியன் இலாபம் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கும் சேவை வழங்குனர்களுக்குமிடையே ஒரு இடைத்தரகராக செயற்பட்டதன் மூலம் உழைக்கப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டிற்கான வருமானத்தை கணக்கீடு செய்தல் இன்றுவரை முழுமையாக மேற்கொள்ளப்படவில்லை. இக்கணிப்பீட்டிற்காக மேலும் தெளிவுபடுத்துதல் தேவைப்படுகின்றது. | அரசாங்கத்திற்கு உச்ச அளவு பிரதிபலன்களை வழங்குவதற்கு முடியுமான வகையில் அரசாங்கத்தின் நிதியை ஆக்கபூர்வமாகும் விளைதிறனாகவும் பயன்படுத்துதல் வேண்டும். |

## 2.11 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | **அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|
| (அ) | கம்பனியால் வங்கி பிணைமுறியினைப் பெற்றுக்கொள்ளாது செயற்திட்டத்திற்காக 38 ஒப்பந்தக்காரர்களுக்கு 2025 பெப்ரவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறு வழங்கப்பட்டிருந்த தீர்த்துவைக்கப்படாத வேைலக்கு முன்னைய முற்பணங்களின் பெறுமதி ரூபா 965,997,986 ஆகும். அதில் 05 | கணக்காய்வின் பொது சமர்ப்பிக்கப்பட்டுள்ள தரவுககளைப் பெற்றுக்கொண்ட மூலங்கள் (Source documents) தொடர்பாக மேலும் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான தேவை உள்ளது. | வங்கி பிணைமுறிகளைப் பெற்றுக்கொள்ளாத வேலைக்கு முன்னைய முற்பணங்களைச் செலுத்திய உத்தியோகத்தர்களுக்கு எதிராக முறையான நடவடிக்கை எடுக்க |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டுகளுக்கு மேற்பட்டவை ரூபா 584,583,650 ஆக இருந்ததுடன் அந்த மீதியில் 07 ஆண்டுகளுக்கும் 10 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட ரூபா 420,194,759 தொகையான பழைய மீதி காணப்பட்டது. | | வேண்டியதுடன் தீர்த்துவைக்கப்படாத வேலைக்கு முன்னைய முற்பணங்களை அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2025 பெப்ரவரி 18 ஆந் திகதியில் உள்ளவாறு கம்பனியால் 256 வேலைக் கட்டளைகளுக்காக வங்கி பிணைமுறிகளைப் பெற்றுக்கொள்ளாது ரூபா 1,401,702,495 வேலைக்கு முன்னைய முற்பணமாக செலுத்தப்பட்டிருந்தது. | கணக்காய்வின் போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள தரவுகளைப் பெற்றுக்கொண்ட மூலங்கள் (Source documents) தொடர்பாக மேலும் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான தேவை உள்ளது. | வேலைக்கு முன்னைய முற்பணங்களை வழங்குவதற்கு முன்னர் அதற்காக போதியளவான மற்றும் செல்லுபடியான வங்கி பிணைமுறிகளைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அவ்வாறு நடவடிக்கை எடுக்காது வேலைக்கு முன்னைய முற்பணங்களைச் செலுத்துவது சம்பந்தமாக உரிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக முறையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | பணிப்பாளர்கள் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட நிதிக் கட்டுப்பாட்டு அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட வேண்டிய போதிலும் பணிப்பாளர்கள் சபையால் அங்கீகரித்த எல்லைகளுக்குள் முறைப்படியாக அதிகாரப்பகிர்வு இடம்பெற்றிருக்காததுடன் கம்பனியின் கொடுக்கல் வாங்கல்கள் சம்பந்தமாக அதிகாரத்தை அமுல்ப்படுத்தும் போது ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்களும் இரண்டு மூன்று | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்கி கொள்ளப்படுகின்றது. | அங்கீகரித்த சட்ட விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்க கம்பனியால் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை எடுத்தல் தொடர்ச்சியாக இடம்பெறுதல் வேண்டும். |

உத்தியோகத்தர்களின் வழியாக பரீட்சிப்பிற்கு உட்படும் வகையில் அதிகாரமளித்தல், அங்கீகரித்தல், சான்றுபடுத்துதல், கொடுப்பனவு செய்தல் என்பன சில நபர்களுக்கிடையே பகிர்ந்தளித்தல் மற்றும் அவ்வாறான அதிகாரத்தை ஒப்படைக்கும் போது கொடுக்கல் வாங்கல்களின் தன்மை அல்லது பணத்தின் அளவு அல்லது சில வரம்புகளை விதித்தல் உறுதியாகவும் எழுத்துமூலம் வழங்கப்படுதல் இடம்பெற்றிருக்கவில்லை. அதற்கிணங்க கம்பனியின் வருமானத்தை சேகரித்தல் மற்றும் செலவு செய்தல் முறையான கட்டுப்பாடின்றி இடம்பெற்றிருந்தது. அதன் மூலம் ஊழல், மோசடிகள், ஒழுங்கீனங்கள் என்பன இடம்பெறுகின்ற மற்றும் அவை வெளிப்படுத்தப்படாதிருக்கின்ற பெரும் ஆபத்து காணப்பட்டது.

## 2.12 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

| **அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| கம்பனியின் நிதி அறிக்கையிடல் நடவடிக்கைகளுக்காக கணனி மென்பொருள் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் இந்த மென்பொருளின் மூலம் கொடுப்பனவுகளானது இணையவழி முறைமையில் (online) இடம்பெற்றிருந்தும் பெறுவனவுகளை இணையவழி முறைமையில் (online) மேற்கொள்வதற்கு முடியாதிருந்ததனாலும் இந்த முறைமையில் பின்வரும் கட்டுப்பாட்டு பலவீனங்கள் அவதானிக்கப்பட்டதனாலும் நிதி அறிக்கையிடல் தொடர்பான தகவல்களின் சரியான தன்மையானது நம்பகரமாக ஏற்றுக்கொள்ளக்கூடிய மட்டத்தில் இருக்கவில்லை. | முறைமைக்கு நாட்குறிப்புக்களை உள்ளடக்கும் போது அனுமதிக்கும் நடைமுறை ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன் காப்பு பிரதிவைக்கும் (Backup) வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. | கணனிமயப்படுத்தப்பட்ட மென்பொருள் முறைமையின் முறைமைக் கட்டுப்பாட்டு பலவீனத்தை சரி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் தாமதமின்றி எடுத்தல் வேண்டும். |

- கம்பனியின் அடிப்படை வணிக நடவடிக்கையான வீதி நிர்மாணத் தொழிலின் ஒப்பந்த நிருவாகம் மற்றும் விலைப்பட்டியல்களைத் தீர்த்துவைத்தல் இயற்கைக்கு பொருந்தும் வகையில் போதியளவான உள்ளடக்கத்துடன் இந்த மென்பொருள் முறைமையானது உருவாக்கப்பட்டிருக்காமை
- முறைமைக்கு நாட்குறிப்புக்களை உள்ளடக்கும் போது முறையான அனுமதியளிக்கும் நடைமுறை ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.
- அறிக்கையிடல் கால எல்லையானது மூடப்படுகையில் முறைமையின் நிருவாகத்தரின் அங்கீகாரத்துடன் நாட்குறிப்புக்களை உள்ளடக்கும் திகதியையும் மாற்றம் செய்யும் இயலுமை காணப்படல்
- காப்பு பிரதிகளை வைத்திருக்கும் (Backups) வசதிகளை கவனித்துப் பார்க்காமை